**பயிர்ப் பெருக்கம் மற்றும் மேலாண்மை**

**துணைத்தலைப்பு : இலையில் தெளிப்பு, உயிரி - கட்டுப்பாட்டு முறைகள்**

**பிரிவு 1**

1 . பின்வரும் வினாக்களுக்கு சரி அல்லது தவறு என்று குறிப்பிடுக.

1a அஸ்ஒஸ்பிரில்லும் ஒரு பாக்டீரியா உயிரி – பூச்சிக்கொல்லி எடுத்துக்காட்டாகும்.

1 b இளநீர் என்பது பல்வேறு தேவைகளுக்காக பயன்படுத்தப்படுகின்றது.

2. சரியான விடையை தேர்ந்தெடுக்க:

2a. பஞ்சகவ்ய கரைசலில் _____________ பொருள் பயன்படுத்தப்படாது.

அ) மாட்டுச் சாணம்  (ஆ) மாட்டின் சிறுநீர்  (இ) தயிர் (ஈ) சர்க்கரை

2 b. ஈஸ்ட் இலையில் தெளிப்பு முறையில் _________________ ஆக பயன்படுத்தப்படுகிறது.

அ) செயல்மிக்க நுண்ணுயிரிகள் (ஆ) மண்புழுக் கரைசல்

(இ) பஞ்சகவ்யா (ஈ) இவை எதுவுமில்லை

**பிரிவு 2**

3. கோடிட்ட இடத்தை நிரப்புக:

3 a. பஞ்சகவ்யா முறையில் விதைகளை ___________ முன்னால் ஊற வைக்கப்படுகின்றன.

3 b. ________________ ஒரு பூஞ்சை உயிரி - பூச்சிக்கொல்லி எடுத்துக்காட்டாகும்.

4. பொருத்துக

| **வ.எண்** | **பக்கம் A** | **பக்கம் B** |
|---|---|---|
| 4 a. | உயிரி - பூச்சிக் கொல்லிகள் | வேப்பிலைகள் |
| 4 b. | உயிரி - கொன்றுண்ணிகள் | பேசில்லஸ் துரின்ஜியென்சிஸ் |
| 4 c. | உயிரி - உரங்கள் | வெள்ளை ஈக்களைக் கட்டுப்படுத்துகிறது |
| 4 d. | உயிரி - சுட்டிக் காட்டிகள் | மண் வளத்தை மேம்படுத்தல் |
| 4 e. | உயிரி – பூச்சி விரட்டிகள் - | சூழ்நிலையின் தரம் |

**பிரிவு 3**

பின்வரும் வினாக்களுக்கு சுருக்கமாக விடையளி

5. இலைவழி ஊட்டமளித்தல் என்றால் என்ன?

6. மண்புழுக் கரைசல் பற்றி வரையறு?

7. கரும் பொறிவண்டு என்றால் என்ன?

8. பல்வேறு வகையான உயிரி - கட்டுப்பாட்டு முறைகளை கூறுக?

**பிரிவு 4**

பின்வரும் வினாக்களுக்கு விரிவான விடையளி

9. இலையில் தெளிப்பு பற்றி விரிவாக விளக்குக.

10. உயிரி - கட்டுப்பாட்டு முறைகள் பற்றி விரிவாக விளக்குக.